# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 8 /2017**

திரு. P. ராமலிங்கம்,
த/பெ பொன்னுசாமி கவுண்டர்,
குமரன் புளூ மெட்டல்ஸ்,
காட்டு முன்னூர்,
கே. பரமத்தி அஞ்சல்,
அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம். . . . மேல்முறையீட்டாளர்
(திரு. P. ராமலிங்கம்)

எதிர்

1) செயற் பொறியாளர்/இ&ப/கிராமியம்/கரூர்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.3, கோவை ரோடு,
கரூர்–639 002.

2) உதவி செயற் பொறியாளர்/இ&ப/சின்னதாராபுரம்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சின்னதாராபுரம், அரவக்குறிச்சி தாலுகா,
கரூர்–639 202.

3) உதவி பொறியாளர்/இ&ப/தென்னிலை,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தென்னிலை,
அரவக்குறிச்சி தாலுகா–639 206. ––– எதிர்மனுதாரர்கள்
(திரு. P.முருகன், உதவி செயற்பொறியாளர்/சின்னதாராபுரம் (பொறுப்பு)
திரு. R. அழகேசன், உதவி பொறியாளர்/ தென்னிலை)

**<u>கேட்புரை நாள் : 2–5–2017</u>**

**<u>ஆணை நாள் : 20.06.2017</u>**

திரு. P. ராமலிங்கம், த/பெ பொன்னுசாமி கவுண்டர், காட்டுமுன்னூர், கே.பரமத்தி அஞ்சல், கரூர் அவர்களின் நாளிடப்படாத மனு மேல்முறையீட்டு மனு எண். 8/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 2.5.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மீட்டர் பழுதடைந்த காரணத்தினால் சராசரி போட தேவையில்லை என தெரிவித்து மேற்படி தொகையை அவருடைய மின்இணைப்பில் கழித்து தர நடவடிக்கை எடுத்து நல்ல தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு எண்.028–001–100ஐ பெற்று கிரஷர் தொழில் நடத்தி வருகின்றார். மேற்கண்ட மின்இணைப்பில் கூடுதல் மின்பளு 77 kw 19.3.2012ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மொத்த பளு 112 kw ஆகும். கூடுதல் மின்பளு அனுமதிக்கும்பொழுது மின்அளவியும் மாற்றப்பட்டுள்ளது.

2.2 8/2012 கணக்கீடு காலத்தில் Display failure என்று மின்அளவி 14.8.2012 அன்று மாற்றப்பட்டது. 8/2012 மாதத்திற்கு சராசரி மின்பயன்பாட்டு கட்டணம் ரூ.55,886/– செலுத்தப்பட்டுள்ளது.

2.3 4/2012 முதல் 6/2012 வரையிலான கணக்கீடு காலத்தில் விடுபட்ட தொகை ரூ.77211/– செலுத்த வேண்டும் என்று 8.6.2015ல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிவிப்பு தணிக்கை பிரிவின் அறிவிப்பின்படி வழங்கப்பட்டுள்ளது

2.4 மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் 25.9.2015 ல் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். ஆனால், மேற்கண்ட நிலுவைத்தொகையை 19.10.2015ல் செலுத்தியுள்ளார்.

2.5 மன்றம் சராசரித் தொகையை தள்ளுபடி செய்ய தணிக்கைத்துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளதால் தணிக்கை குழுவினரின் முடிவினை பொறுத்த மேல் நடவடிக்கை எடுக்க 22.12.2015ல் உத்தரவு இட்டுள்ளது.

2.6 மீண்டும் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 12.4.2016 மற்றும் 17.10.2016 ல் மேல்முறையீட்டாளர் மனு செய்துள்ளார். மன்றம் மனுவை தள்ளுபடி செய்துவிட்டது.

2.7 மேற்கண்ட தீர்ப்பில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 3. <u>தாமத்திற்கு மன்னிப்பு</u>

3.1 கரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தன்னுடைய தீர்வை 30.11.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

3.2 மன்ற விதியின்படி மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டு மனுவை மன்றத்தின் ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். எனவே, மேல்முறையீடு 30.12.2016ற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆனால், மேல்முறையீடு 18.1.2017 அன்றுதான் மின் குறைதீர்ப்பாளரின் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

3.3 மேல்முறையீட்டாளர் 30.11.2016 நாளிட்ட தீர்ப்புரை 5.12.2016 அன்றுதான் அவருக்கு கிடைத்தது என்றும், அவருடைய குடும்ப சூழ்நிலை காரணமாக 10 நாட்கள் தாமதமாக முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் முறையீட்டை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

3.4 இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 8ஐ ஆராய விரும்புறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“மன்றம் வழங்கிய ஆணையால் பாதிக்கப்பட்ட நபர், அந்த ஆணையை எதிர்த்து ஆணையம் நிர்ணயித்த படிவத்தில் குறிப்பிட்ட விதத்தில் மின்சார குறைதீர்ப்பாளரிடம், ஆணை வழங்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.*

*மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு போதுமான காரணம் இருந்தது என மின்சார குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட முப்பது நாட்களுக்குப் பிறகும் மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம்.*

*மன்றத்தின் ஆணைப்படி பணம் செலுத்த கோரப்பட்ட எந்த மேல் முறையீட்டாளரும், மன்றம் ஆணையிட்ட தொகையில் இருபத்தைந்து சதவீத தொகையை குறிப்பிட்ட விதத்தில் முன் பணமாக செலுத்தினாலொழிய, மின் குறைதீர்ப்பாளர் எந்த மேல் முறையீட்டையும் ஏற்றுக் கொள்ள மாட்டார். ”*

3.5 மேற்கண்ட விதியின்படி மேல்முறையீட்டை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் தாக்கல் செய்வதற்கு போதுமான காரணம் உள்ளது என்று மின்குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

3.6 இந்த மேல்முறையீட்டாளர் தன்னுடைய குடும்ப சூழ்நிலைகாரணமாக மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பிக்க காலதாமதமாகிவிட்டது என்று தெரிவித்துள்ளதால், அவரின் தாமதம் மன்னிக்கப்பட்டு மனு மேல்முறையீட்டு மனு எண்.8/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. <u>மன்றத்தின் தீர்வு:</u>

கரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.11.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்டுள்ள பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்வு</u>*
*மனுதாரர் தொழிற்சாலை மின்இணைப்பு எண்.028-001-100/TF IIIBல் வசூல் செய்யப்பட்ட சராசரித்தொகை ரூ.77221/- தள்ளுபடி செய்யக்கோரிய மனு ஏற்கனவே இம்மன்றத்தில் 26.12.2015ல் விசாரணை செய்யப்பட்டு வழங்கிய தீர்ப்பின்படி தணிக்கைக்குழு/திருச்சி அவர்களிமிருந்து பெறப்பட்ட அறிக்கையில் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மின்இணைப்பின் மின்பயனீட்டு அளவுகளை ஆராய்ந்ததில் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி சராசரித்தொகை 04/2012 முதல் 6/2012 வரை வசூலிக்கப்பட்டது சரியானது என ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது. மேற்படி மனுதாரரின் கோரிக்கையை நடைமுறை வாரிய விதிமுறைக்கேற்ப ஆராய்ந்தறிந்து ஏற்க இயலாததாக அறியப்பட்டு நிராகரிக்கப்பட்டு மேற்படி மனு எண்.14/12.10.2016 ஆனது இம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது. "*

5. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

5.1 மேல்முறையீட்டாளர் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், தென்னிலை கிராமம், அம்மாபட்டி, காட்டுமுன்னூர் என்ற இடத்தில் கிரஷர் தொழில் நடத்தி வருகிறார். மேற்படி தொழிலுக்கு ஆரம்பகட்டத்தில் 35 KW மின் திறனுடன் மின்இணைப்பு வழங்கப்பட்டது. அதற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.028-001-100 ஆகும். அதன்பிறகு கூடுதல் மின்பளு 77 kwற்கு விண்ணப்பம் சமர்ப்பித்து மேற்படி கூடுதல் மின் பளு 77 kw வழங்கி CT மின் இணைப்பாக மாற்றம் செய்துவிட்டனர். கூடுதல் மின்பளு 19.3.2012 அன்று வழங்கப்பட்டது.

5.2 **8/2012** மாதத்தில் Display failure என்ற காரணத்தினால் **14.8.2012** மீட்டர் மாற்றம் செய்யப்பட்டது **07/2012** மாதத்திற்கு சராசரி கணக்கீட்டு தொகை **55886/–** வசூல் செய்யப்பட்டது. மாதந்தோறும் மின்கட்டணம் ஒழுங்காக செலுத்தி வந்தார். **3** வருடம் கழித்து **9.6.2015**ல் **3/2012** மற்றும் **4/2012** வரை சராசரி விடுபட்ட தொகை என்று குறிப்பிட்டு ரூ.**77211/–** செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டது.

5.3 மீட்டர் கூடுதல் பளு கொடுத்த தேதியிலிருந்து (**19.3.2012**) **7/2012** (அதாவது **30.6.2012**) வரை மீட்டர் நன்றாக இருந்தது என்றும் அதன்பிறகுதான் Display Failure ஆனது எனக்கூறி பழுது தொகையை நிறுத்தி வைக்கும்படி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கரூர் அவர்களுக்கு மனுக்கொடுத்தார். ஆனால், அவருடைய கோரிக்கை உயர் அதிகாரிகள் கேட்காமல் மின் துண்டிப்பு செய்யப்படும் என அச்சுறுத்திய காரணத்தினால் தொகையை செலுத்திவிட்டார்.

5.4 **26.12.2015** அன்று அவரது மனுவை விசாரணைக்கு மேற்கொண்டு கீழ்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. ‘‘மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று சராசரி தொகையை தள்ளுபடி செய்ய பரிந்துரை செய்யப்பட்டு கோப்பு தணிக்கைக்குழுவினருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளதால் தணிக்கை குழுவினரின் முடிவினைப் பொறுத்து மேல் நடவடிக்கைக்கு உத்தரவிட்டுள்ளது’’.

5.5 **30** நாட்களுக்கு மேலாகியும், எந்தவிதமான தகவலும் அவருக்கு வழங்கபடாத காரணத்தினால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மீண்டும் **12.4.2016** மற்றும் **17.10.2016** மனு கொடுத்து மேற்படி மனு மீது **30.11.2016** அன்று அவரிடம் விசாரணை மேற்கொண்டு கீழ்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

*‘‘மனுதாரரின் தொழிற்சாலை மின்இணைப்பு எண்.**028–001–100** TF – IIIBல் வசூல் செய்யப்பட்ட சராசரி தொகை ரூ.77221/–ஐ தள்ளுபடி செய்ய கோரிய மனு ஏற்கனவே இம்மன்றத்தில் **26.12.2015**ல் விசாரணை செய்யப்பபட்டு வழங்கிய தீர்ப்பின்படி தணிக்கைக்குழு திருச்சி அவர்களிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் தமிழ்நாடு*

*ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்படி மின்இணைப்பின் மின் பயனீட்டு அளவுகளை ஆராய்ந்ததில் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி சராசரி 4/2012 முதல் 5/2012 வரை வசூலிக்கப்பட்டது சரியானது என ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது. மேற்படி மனுதாரரின் கோரிக்கையை நடைமுறை வாரிய விதிமுறைக்கேற்ப ஆராய்ந்தறிந்து ஏற்க இயலாததாக அறியப்பட்டு நிராகரிக்கப்பட்டு மேற்படி மனு 14/17.10.2016 ஆனது இம்மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது".*

5.6 மேற்படி தீர்ப்பில் 4/2012 முதல் 5/2012 வரை மின் பயனீட்டு அளவுகளை மற்றும் ஆராய்ந்து சராசரி போட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது அவருடைய 29.9.2016 கடிதத்தில் 4/2012 முதல் 6/2012 மீட்டர் பழுதே ஆகவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும், உதவி மின்பொறியாளர், தென்னிலை அவர்கள் 18.3.2012 மீட்டர் மாற்றாமலேயே அதே மீட்டரை மாற்றி வைத்ததாக கணினியில் தவறுதலாக பதிந்துள்ளார் என தெரிவித்திருந்தார். மீட்டர் மாற்றிய விவரம் Normal என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றும் 7/2012 மாதத்தில் மீட்டர் பழுது என்று சராசரி யூனிட் 8421.6 தொகையை வசூல் செய்துவிட்டார்.

5.7 மேலும், சராசரி கணக்கீடு செய்யும் போது தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளை கடைபிடிக்காமல் சராசரி கணக்கீடு செய்துள்ளார்கள். கூடுதல் மின்பளு கொடுத்த காரணத்தினால் நல்ல மீட்டரை வைத்து அதன் பிறகு 4 மாதங்களின் மின் அளவு எடுத்து சராசரி கணக்கீடு செய்யவேண்டும் என்று ஒழுங்குமுறை ஆணைய விதிகளை கடைபிடிக்காமல் செய்துள்ளார்கள்.

| | |
|---|---|
| 10/2012(09/2012) | 4688.0 |
| 11/2012(10/2012) | 2521.2 |
| 12/2012(11/2012) | 2653.2 |
| 01/2012(12/2012) | 4637.2 |
| | 14499.6 |
| AV.3624.9 (or) 3625.0 | |

5.8 4/2012 முதல் 5/2012 மீட்டர் பழுது என்று தாங்கள் தெரிவித்தால் தான் சராசரி போட வேண்டும். பயனீட்டு அளவு 4/2012 முதல் 6/2012 குறைவான யூனிட் பதிவாகி உள்ளதால் பயனீட்டு அளவை ஆராய்ந்து போடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள். குறைவான உபயோகம் காரணமாக குறைவான யூனிட் பதிவாகியுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறார்.

5.9 மேலும், 4/2012 முதல் 7/2012 வரை பதிவான யூனிட் விபரம் கீழ்கண்டவாறு

| Month | Reading Datte | Entry Date | Unit |
|---|---|---|---|
| 4/2012 | 1.4.2012 | 18.4.2012 | 15.2 |
| 5/2012 | 1.5.2012 | 18.5.2012 | 1000.8 |
| 6/2012 | 1.6.2012 | 11.6.2012 | 5026.0 |
| 7/2012 | 2.7.2012 | 5.7.2012 | 8421.6 |

2.7.2012 வரை யூனிட் பதிவாகி இருக்கும் போது மீட்டர் பழுது ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. மேலும், இது ஒரு STATIC ELECTRIC METER ஆகும். நின்று நின்று ஓடுவதற்கு வாய்ப்பில்லை.

5.10 மேலும், மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய பரிந்துரை செய்து தென்னிலை அலுவலகத்திலிருந்து திருச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று 26.12.2015 குறைதீர்க்கும் மன்றம் தீர்ப்பிலும் கூறப்பட்டுள்ளது என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறார்.

## 6. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

6.1 சின்னதாராபுரம் உபகோட்டம் தென்னிலை பிரிவுக்கு உட்பட்ட மின்இணைப்பு எண்.028–001–100ல் திரு. ராமலிங்கம், காட்டுமுன்னூர் பகிர்மானம் அவர்கள் கிரஷர் தொழில் செய்து வந்தார். பிறகு தனது கிரஷர் நிறுவனத்தை விரிவாக்கம் செய்யும்பொருட்டு மின்பளு 35 kw லிருந்து கூடுதலாக 77 kw மின்பளு கோரி திரு. ராமலிங்கம் அவர்கள் அளித்த விண்ணப்பத்தின் பெயரில் 19.3.2012 அன்று கூடுதல் மின்பளு 77 kw வுடன் சேர்த்து ஆக மொத்தம் 112 kw வழங்கப்பட்டு LTCT மின் இணைப்பாக விகிதப்பட்டியலிலும் மாற்றப்பட்டது.

**6.2** மேற்கண்ட மின் இணைப்பு எண்.**028–001–100**ல் **8/2012** மாதத்திய consumption கணக்கீடு செய்யும்போது மின்அளவி Display Failure ஆனது கண்டறியப்பட்டு பிறகு பழுதான மீட்டர் **14/8/2012** அன்று மாற்றம் செய்யப்பட்டு **7/2012** மாதத்திற்குரிய தொகையே **8/2012** மாதத்திற்கும் வசூல் செய்யப்பட்டது.

**6.3** இந்நிலையில் மின் அளவி பழுதான காலகட்டத்திற்கு திருச்சி தணிக்கைகுழு அவர்களால் **4/2012** முதல் **6/2012** வரை குறைந்த மின் நுகர்வு கண்டறியப்பட்டு அவற்றிற்கான சராசரி விகிதம் கணக்கிடப்பபட்டு அவற்றை ஏற்கனவே மின் நுகர்வோர் செலுத்திய தொகை ரூ.**60,451/–** போக மீதித்தொகை (ரூ.**137662**–ரூ.**60451/–**) ரூ.**77211/–** செலுத்த தணிக்கை சீட்டு எண்.**90, 4/4/2015**ன் படி உத்திரவிடப்பட்டிருந்தது. இவற்றை சம்பந்தப்பட்ட மின்நுகர்வோருக்கு கடிதம் மூலம் செலுத்த கோரப்பட்டது. இவற்றைப் பெற்றுக்கொண்ட மின் நுகர்வோர் **77211/–** ஒரே தவணையில் செலுத்த முடியவில்லை என்றும் அவற்றிற்கு மூன்று தவணையில் செலுத்துவதாக கடிதம் மூலம் **15/9/2015** செயற்பொறியாளர்/இயக்கலும்–காத்தலும்/கிராமியம்/கரூர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்ததின் அடிப்படையில் **23.9.2015** அன்று அனுமதி வழங்கப்பட்டது.

**6.4** இதற்கிடையில் மின் நுகர்வோர் திரு. ராமலிங்கம் அவர்கள் **25.9.2015** அன்று தனது மனுவை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் / கரூர்க்கு அளித்து மேற்படி தணிக்கை தொகையை தள்ளுபடி செய்ய வேண்டி விண்ணப்பித்துள்ளார். மனுதாரரின் விண்ணபத்திற்கு செயற்பொறியாளர்/கிராமியம் கடித எண்.**889/2015** நாள் **14.10.2015**ல் விளக்கத்தை மேற்பார்வை பொறியாளருக்கு சமர்ப்பித்து மேற்படி சராசரி குறைவுத்தொகையை மின்நுகர்வோர் செலுத்த உத்தரவு வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், ஏற்கனவே தவணைத் தொகை செலுத்த மின்நுகர்வோர்ருக்கு அனுமதி அளித்திருந்தால் மின்நுகர்வோர்

தவணை தேதி செலுத்த தவறியதால் முழுத்தொகையும் அதாவது 77211/– ஐ PGNSB 12484636 தேதி 19.10.2015ல் இணையதள வங்கி மூலம் ஒரே தவணையில் முழுவதும் செலுத்தியுள்ளார்.

6.5 மேற்படி மின்நுகர்வோரின் மனு மீது மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கரூர் 30.11.2016 தேதியிட்ட உத்தரவின்படி தணிக்கை அலுவலர் திருச்சி அவர்களிடமிருந்து அ.எண்.1715/2016 நாள் 25.11.2016ல் மேற்படி தணிக்கை தொகையானது மின்நுகர்வோரிடமிருந்து முழுவதும் வசூல் செய்யப்பட்ட நிலையில் TNERC Rule படி நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

6.6 எனவே, TNERC விதிகளின்படி மேற்படி மின் இணைப்பு எண்.028–001–100க்கு வசூல் செய்யப்பட்ட சராசரி குறைவுத்தொகை ரூ.77211/– சரியானது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

7.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 25.4.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின்முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு. P. ராமலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

7.3 எதிர்மனுதாரர்–2 திரு. பி. முருகன், உதவிசெயற்பொறியாளர்/சின்னதாராபுரம்(i/c), எதிர்மனுதாரர்–3 திரு. ஆர். அழகேசன், உதவி பொறியாளர்/தென்னிலை அவர்களும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

8. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 தன்னுடைய மின்இணைப்பில் பொருத்தப்பட்டிருந்த மின்னளவியில் Display Failureக்கு முன்பாக அது பழுதாகவில்லை என்றும் அந்த காலங்களில் தன்னுடைய தொழில்சாலையில் கூடுதல் பளு அனுமதிக்கப்பட்ட இயந்திரங்களின் நிறுவுதல் பணி (erection works) நடந்து கொண்டு இருந்ததால் 4/2012 மற்றும் 5/2012 மாதங்களின் பயன்பாடு குறைவாக இருந்துள்ளது என்று வாதிட்டார்.

8.3 மேலும், 7/2012ன் பயன்பாட்டளவு 8421 யூனிட்டுகள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது சரி என்று எதிர்மனுதாரர் அந்த பயன்பாட்டினைத்தான் 19.3.2012 முதல் 6/2012 வரையிலான காலங்களுக்கு சராசரி என்று எடுத்து கொண்டுள்ளார். அவ்வாறு 7/2012 கணக்கீடு காலத்தில் மின் அளவி பழுது இல்லை என்று அந்த பயன்பாட்டை மற்ற காலங்களுக்கு வசூல் செய்ய வேண்டும் என்ற நிலையில் அதற்கு முன்னால் உள்ள கணக்கீடு காலத்தில் மட்டும் மின்னளவி பழுது என்பது ஏற்புடையது அல்ல என்று வாதிட்டார்.

8.4 மேலும், 20.4.2012ல் மின்னளவி மாற்றப்பபட்டுள்ளது என்று consumer ledger பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு மாற்றப்படவில்லை என்று வாதிட்டார்.

8.5 மேலும், மேற்கண்ட காலங்களில் தன்னுடைய தொழிற்சாலையில் உற்பத்தி குறைவு என்பதற்கான ஆவணங்கள் 5 வருட காலம் ஆகிவிட்டதால் இல்லை என்றும் தெரிவித்தார்.

8.6 தன்னுடைய மின் இணைப்பில் மின்பயன்பாடு குறைவாக உள்ள காலத்திற்கு சராசரி மின்பயன்பாட்டளவு என்று அதிக கட்டணம் வசூல் செய்வது நியாமற்றது என்றும் வாதிட்டார்.

## 9. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர்கள் எடுத்துரைத்த வாதங்கள்</u>

9.1 திரு. முருகன், உதவி செயற்பொறியாளர்/சின்னதாராபுரம்(பொறுப்பு) அவர்கள் எதிர்மனுதாரர்களின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

9.2 19.3.2012 முதல் 6/2012 வரையிலான காலங்களில் மின்னளவியில் பதிவாகியுள்ள பயன்பாடு பிந்தைய காலங்களின் பயன்பாட்டைவிட குறைவுஎன்பதால் விட்டுப் போன குறைவு தொகை தணிக்கை துறையின் அறிக்கையின்படி கோரப்பட்டது என்றும் வாதிட்டார்.

9.3 மேற்கண்ட மின்னளவியின் பதிவிறக்கம் செய்யப்பட்ட தகவல்கள் இல்லை என்றும் தெரிவித்தார்.

9.4 தன்னுடைய தொழிற்சாலையில் இயந்திரங்கள் நிறுவுவதால் பயன்பாடு குறைவாக இருக்கும் என்ற தகவலை மேல்முறையீட்டாளர் இயந்திரங்கள் நிறுவும் பொழுது தெரிவிக்கவில்லை என்றும் வாதிட்டார்.

9.5 மேலும், 35 kw மின்பளுவுடன் கூடுதல் மின்பளு பெற்று மொத்த மின்பளு 112 kw என்ற நிலையில் பயன்பாடு 15.2 யூனிட், 1000.8 யுனிட் என்பது அந்த மின்இணைப்பில் 35 kw மின்பளு இருந்த காலத்தைவிட குறைவு என்பதையும் சுட்டிக்காட்டி எனவே, அந்த காலங்களுக்கு சராசரி மின் பயன்பாட்டின்படி மின்கட்டணம் வசூலிப்பது சரிதான் என்றும் வாதிட்டார்.

## 10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

10.1 இருதரப்பு வாதங்களையும் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) மின்அளவி பழுதா ? பழுது எனில் எந்த கணக்கீடு காலத்திலிருந்து பழுது ?

(ii) மேல்முறையீட்டாளருக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க முடியுமா ?

## 11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>

11.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பில் 8/2012 காலத்தில் தான் மின்னளவி பழுது என்று தெரிவிக்கப்பட்டு சராசரி தொகை விதிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பு Reading type normal என்றுதான் போடப்பட்டுள்ளது. எனவே, 19.3.2012 அன்று முதல் மின் அளவி பழுது என்பது தவறு என்று வாதிட்டார்.

11.2 மேலும், 7/2012 கணக்கீடு கால பயன்பாட்டை எடுத்துக்கொண்டு சராசரி பயன்பாட்டளவு எடுக்கப்பட்டுள்ளது அவ்வாறு 7/2012ன் பயன்பாடு மின்னளவியில் பதிவானது சரி என்று எடுத்துக் கொள்ளும்போது 19.3.2012 முதல் மின்னளவி பழுது என்று தெரிவிப்பது தவறு என்று வாதிட்டுள்ளார்.

11.3 மேலும், 4/12 மற்றும் 5/12 மாத கணக்கீடு காலங்களில் அவரின் மின் இணைப்பில் கூடுதல் மின்பளுக்கான இயந்திரங்களை நிறுவும் பணி நடைபெற்று கொண்டு இருந்ததால் மின்பயன் பாடு குறைவாக இருந்துள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

11.4 எதிர்மனுதாரர் 19.3.2012ன் கூடுதல் மின்பளு பெறும்பொழுது மாற்றப்பட்ட மின்னளவி சரியாக இயங்கவில்லை என்று வாதிட்டார்.

11.5 மேலும், ஒரு 112 kw மின்பளு உள்ள மின்இணைப்பில் 4/12மாதத்தின் மின்பயன்பாடு 15.2 யூனிட்டுகள் மற்றும் 5/12 மாதத்தில் 1000 யூனிட்கள் என்று பதிவாகியுள்ளதால் அவை மின்னளவி பழுது என்பதைத்தான் சுட்டிகாட்டுகின்றது என்று வாதிட்டுள்ளார்.

11.6 மேலும், 3/12, 4/12, 5/12 மற்றும் 6/12 ஆகிய மாதங்களின் பயன்பாடு கூடுதல் மின்பளு 77 kw பெறுவதற்கு முன்பு 35 kw என்ற மின்பளு உள்ள நிலையிலுள்ள பயன்பாட்டை விட குறைவாக உள்ளதால் மின்னளவி கூடுதல் மின்பளு அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து பழுதுதான் என்று வாதிட்டுள்ளார்.

**11.7** மேலும், பதிவு இறக்கம் மேற்கண்ட மின்னளவியில் செய்யப்பட முடியவில்லை என்றும், எனவே, பதிவு இறக்கம் செய்யப்பட்ட தகவல்கள் இல்லை என்றும் தெரிவித்தார்.

**11.8** இந்த வழக்கில் மின்னளவி பழுது என்பதற்கு பரிசோதனை அறிக்கை எதுவும் இல்லை. மேலும், பதிவு இறக்கம் செய்யப்பட்ட தகவல்களும் இல்லை. மேற்கண்ட நிலையில் நான் 2008முதல் 2014 வரையிலான காலங்களின் மின்பயன்பாட்டை ஆராய விரும்புகிறேன்.

| period | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2090 | 1340 | 1660 | 3040 | 1810 | 4637.2 | 4782 |
| | | | | | | 980 | 2518.4 |
| 3 | 1150 | 1140 | 1450 | 770 | 450 | 2320 | 6801.2 |
| | | | | | 15.2 [19.3.12 (addl. load) meter changed] | 2264 | 9693.8 |
| 5 | 1350 | 3730 | 2280 | 1040 | 1000.8 | 5400 | 7886.8 |
| | | | | | 5026 | 6048 | 8856.4 |
| 7 | 3970 | 2220 | 2880 | 1050 | 8421.6 meter changed on14.8.12 | 7074.4 | 9554 |
| | | | | | 8421.6(Av) | 9188.4 | 6311.6 |
| 9 | 2990 | 2270 | 1720 | 1220 | 5944.2 | 5018 | 6256.4 |
| | | | | | 4698 | 5798.8 | 4542.8 |
| 11 | 2930 | 2930 | 2900 | 1150 | 2521.2 | 3413.6 | 5106 |
| | | | | | 2653.2 | 2598.4 | 2758.8 |
| **Total** | **14480** | **13630** | **12890** | **8270** | **38701.8** (from 19.3.12 to 1.12.12) | **54740.8** | **75068.2** |
| Monthly Ave | 1207 | 1136 | 1074 | 689 | 4300 | 4562 | 6256 |

**11.9** மேற்கண்ட அட்டவணையின்படி 2008 முதல் 2011 வரை அதாவது கூடுதல் மின் பளு பெறும்வரை மாத பயன்பாடு 689 யூனிட் முதல் 1207 வரை உள்ளது என்று தெரிகிறது. ஆனால், மின்பளு, கூடுதல் மின்பளு 77 kw வுடன் சேர்த்து 112 kw என்று ஆன பின்பு பயன்பாடு 4300, 4562, 6256 என்று வருடாவருடம் உயர்ந்து காணப்படுகின்றது.

**11.10** **19.3.2012** அன்று கூடுதல் மின்பளு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், **6.1.2012** முதல் **6.3.2012** வரை உபயோக **450** யூனிட்கள் என்று குறைந்து காணப்படுகிறது. அதாவது மாத பயன்பாடு **225** யூனிட்டுகள் என்று உபயோகம் உள்ளது. மேலும், **6.3.12** முதல் **19.3.2012** வரை **13** நாட்களில் சுமார் **100** யூனிட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், மின்பளு உயர்த்திய பின்பு **19.3.2012** முதல் **1.4.2012** வரை **15.2** யூனிட்டுகள் தான் பயன்பாடு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

**11.11** ஆனால், **5/2012** மாத பயன்பாடு **1000.8** யூனிட்டுகள் என்றும் **6/2012** பயன்பாடு **5026** யூனிட்டுகள் என்றும் **7/2012**ன் பயன்பாடு **8421.6** யூனிட்டுகள் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மின் அளவீடு (reading) பதிவும் Normal என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது மின் அளவீடும் (reading) **2.7.2012**ல் **881.41** என்றும் **6.8.2012** அன்றும் **881.41** என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டாளர் மின்னளவி Display failure என்றுதான் மாற்றப்பட்டது என்று வாதிட்டுள்ளார். உதவி செயற்பொறியாளர்/MRTன் **31.8.12** நாளிட்ட கடிதத்திலும் மின் அளவி Display failed என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, **8/2012**ல் மின்பயன்பாடு அளவு எடுக்கும்பொழுது மின்னளவி பழுது என்பது தெரிகிறது.

**11.12** மேலும், **6/2012** மற்றும் **7/2012** மாத பதிவுகளான **5026, 8421.8** யூனிட்டுகள் என்ற பயன்பாட்டை கூடுதல் மின்பளு பெற்ற பின்பு உள்ள **2012** மற்றும் **2013** வருடங்களின் சராசரி மாத பயன்பாடுகளான **4300** யூனிட்டுகள் **4562** யூனிட்டுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்பொழுது அந்த சராசரி பயன்பாட்டை விட **6/2012** மற்றும் **7/2012**ல் பதிவான பயன்பாடு அதிகமாக உள்ளது என்று தெரிகிறது. எனவே, மேற்கண்ட நிலையில் **6/2012** மற்றும் **7/2012** காலங்களில் மின்னளவி பழுது என்று கருதமுடியவில்லை. மேற்கண்ட மின்னளவி **19.3.2012**ல் தான் கூடுதல் மின்பளு அனுமதிக்கும்பொழுது மாற்றப்பட்டுள்ளது. **6/2012** மற்றும் **7/2012** மாத பயன்பாட்டளவு ஏற்புடையதாக இருப்பதால் **19.3.2012**ல் மாற்றப்பட்ட மின்னளவி **2.7.2012**ல் **7/2012** மாத பயன்பாடு கணக்கீடு செய்யும் நாள்வரையில் அது பழுது இல்லை என்று நான் கருதுகிறேன்.

11.13 மேலும், எதிர்மனுதாரர் 7/2012ல் பதிவாகியுள்ள மின்பயன்பாடு சரி என்று எடுத்துக் கொண்டுஅதையே சராசரி பயன்பாடாக முந்தைய மாதங்களுக்கும் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே, 19.3.2012ல் மாற்றப்பட்ட மின் அளவியின் 7/2012 பதிவு சரி என்று எதிர்மனுதாரர் எடுத்துக் கொள்ளும் நிலையில் 7/2012 கணக்கீடு காலத்தில் மின் அளவி நல்ல நிலையில் உள்ளது என்றுதான் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அவ்வாறு 7/2012ல் மின் அளவியின் செயல்பாடு சரி என்ற நிலையில் அதற்கு முன் உள்ள காலங்களில் மட்டும் மின்னளவி பழுது என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக இல்லை.

11.14 மேலே பத்தி 11.11 மற்றும் 11.12ல் ஆகியவற்றில் உள்ள ஆராய்வின்படி மேற்கண்ட மின்இணைப்பில் உள்ள மின்னளவி 19.3.2012 முதல் 2.7.2012 (7/2012 கணக்கீடு காலம்) வரை நல்ல நிலையில் இயங்கி வந்துள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

12.1 என்னுடைய வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி 19.3.2012 முதல் 2.7.2012 வரை மேற்கண்ட மின்இணைப்பில் நிறுவப்பட்ட மின்னளவி பழுது இல்லை என்பதால் 19.3.2012 முதல் 2.7.2012 வரை அந்த மின்னளவியில் பதிவான பயன்பாடுதான் அந்த மின் இணைப்பின் பயன்பாடாகும். எனவே, 9.3.2012 முதல் 1.6.2012 வரையிலான காலத்திற்கு மட்டும் மின்னளவி பழுது என்று சராசரி பயன்பாடு என்ற கணக்கில் வசூல் செய்யப்பட்ட ரூ.77,221/—ஐ மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13. <u>முடிவுரை</u>

13.1 என்னுடைய வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் சராசரி பயன்பாடு என்று 19.3.2012 முதல் 1.6.2012 வரையிலான

காலங்களுக்கு வசூல் செய்யப்பட்ட ரூ.77,211/—ஐ மேற்கண்ட மின்இணைப்பின் இனி வருங்காலங்களின் மின்கட்டணங்களில் சரி செய்யவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.2 மேற்கண்ட தீர்வை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

13.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண்.8/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. P. ராமலிங்கம்,
த/பெ பொன்னுசாமி கவுண்டர்,
குமரன் புளூ மெட்டல்ஸ்,
காட்டு முன்னூர்,
கே. பரமத்தி அஞ்சல்,
அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம்.

2) செயற் பொறியாளர்/இ&ப/கிராமியம்/கரூர்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.3, கோவை ரோடு,
கரூர்—639 002.

3) உதவி செயற் பொறியாளர்/இ&ப/சின்னதாராபுரம்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சின்னதாராபுரம், அரவக்குறிச்சி தாலுகா,
கரூர்—639 202.

4) உதவி பொறியாளர்/இ&ப/தென்னிலை,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தென்னிலை,
அரவக்குறிச்சி தாலுகா—639 206.

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும்  மன்றம்,
கரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.3, கோவை ரோடு, கரூர்–639 002.

6)  தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19ஹ, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) –    <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.